சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனம்– தமிழ்நாடு அமைச்சுப் பணி –திருமதி.K.காஞ்சிராணி, க/பெ.(லேட்) திரு.ஆனந்த நடராஜன் – தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை

அரசாணை ( 2 பத்தாண்டு ) எண். 141

நாள்: 15.11.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, ஐப்பசி–29

படிக்கப்பட்டது:

1) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.6208/நிபி8/1/2018, நாள்20.04.2018

2) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்(எம்) துறை, நாள். 01.08.2018

-----

ஆணை :-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அரசு மருத்துவமனையில் ஊர்தி ஓட்டுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.ஆனந்த நடராஜன் என்பவர் 18.04.2012 அன்று இறந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 12.04.1963 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.04.2021 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.K.காஞ்சிராணி, என்பவர் தனக்கு பணிநியமனம் வேண்டி 05.08.2014 மற்றும் 06.02.2015 அன்று விண்ணபித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 04.04.1971 என்றும், திருமதி.K.காஞ்சிராணி என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தனியர் சிவகங்கை மாவட்டம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் தட்டச்சராக 10.04.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், தனியரை தட்டச்சர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 10.04.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று திருமதி.K.காஞ்சிராணி, என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராக சேர்ந்த நாளான 10.04.2017 முற்பகல் முதல், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அதைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.19133/க்யூ.1/2018–1, நாள் 12.11.2018–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–06.
திருமதி.K.காஞ்சிராணி, தட்டச்சர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18.

நகல்
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/11/18
பிரிவு அலுவலர்
19/11/18

K. Dis. No. 4159/E3/18

Joint Director of Health Services, Sivaganga Dt 31/12/18

Forwarded

Joint Director of Health Services,
Sivagangai District,
SIVAGANGAI - 630 561.

31/12/18

To: -

Tmt. K. Kanchirani,
Typist.
Joint Director of Health Services, Sivaganga
(Deputation: Govt. Head Quarters Hospital